RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 46 | பிப்ரவரி.22 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







# "200 தொகுதிகளில் வெல்வது நிச்சயம் 200 + லட்சியம் : முதல்வர் சூளுரை

மதுரை, பிப்.22-

"தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்வது நிச்சயம், 200க்கும் மேல் வெல்வது லட்சியம்" என முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரை மாநாட்டில் பேசினார்.

'மதுரையில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' என்ற தலைப்பில் தென் மண்டல திமுக வாக்குச்சாவடி முகவர்கள் குழு பயிற்சி மாநாடு நேற்று (பிப்.21) நடைபெற்றது. மாநாட்டை தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியது: "மாநாட்டில் கூடியிருக்கும் வாக்குச்சாவடி முகவர்களை பார்க்கும்போது என் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

'இனி எப்போதும் நாம்தான்' என்ற நம்பிக்கையுடன் நான் இருப்பதற்கு காரணம் திமுகவின் வேர்களாக இருக்கும் நீங்கள்தான். வாக்குச்சாவடி குழுவினர் நியமனத்தை நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பே தொடங்கிவிட்டோம்.

களப்பணியில் இருக்கும் முகவர்களுக்கான மண்டல அளவிலான பயிற்சி கூட்டங்களை நானே நேரில் சென்று நடத்தியுள்ளோம். அதனால்தான் நாடாளுமன்ற தேர்தலில் 40 இடங்களிலும் வெற்றி பெற்றோம். அடுத்து புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்காக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி இந்தியாவில் எந்த கட்சியும் செய்ய முடியாத ஒரு தனி செயலியை தொடங்கி, வீடு வீடாக சென்று 1.10 கோடி குடும்பங்களை உறுப்பினர்களாக சேர்த்தோம்.

அடுத்த பணி உடனடியாக வந்தது. அதுதான் எஸ்ஐஆர். எஸ்ஐஆரில் இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் பல லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் யாருடைய வாக்குகளும் நீக்கவிடாமல் பம்பரமாக உழைத்த இயக்கம் திமுக. அடுத்து தேர்தலுக்கு தயாராக வாக்குச்சாவடி முகவர் குழுக்களை சந்தித்து வருகிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது இருக்கும் வாக்குச்சாவடி அடிப்படையில் தமிழகத்தில் 75,032 பிஎல்ஏக்கள் உள்ளனர். பிஎல்சிக்கள் 55,000 பேர், பிடிஏக்கள் 75,032 பேர் உள்ளனர். வரும் தேர்தல் களத்தில் வெற்றியை உறுதி செய்வது இவர்கள்தான்.

திருவிடந்தையில் நடைபெற்ற மண்டல மாநாட்டில் 1.30 லட்சத்துக்கும் அதிகமானோர், திருப்பத்தூரில் நடைபெற்ற மாநாட்டில் 1.26 லட்சம் பேர் பங்கேற்றனர். மதுரை மாநாட்டில் 1.56 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளனர். அடுத்து வரும் 27ம் தேதி கோவையில் மேற்கு மண்டல மாநாடு நடக்கவுள்ளது.

கடந்த 2 மாதத்தில் மட்டும் இளைஞரணி, மகளிரணி என 7 மாநாடுகள் நடத்தப்பட்டு 9.30 லட்சத்துக்கும் அதிகமானோரை சந்தித்து பேசியிருக்கிறேன். இதனால் சவால் விட்டு சொல்கிறேன். இந்த அளவுக்கு நம்மைப் போல் பூத் அளவில் நிர்வாகிகள், இளைஞர்கள், மகளிர்கள் என இப்படி தேர்தலுக்கு ஆயத்தாகும் கட்சியை இந்தியாவில் யாராலும் காட்ட முடியாது.

திமுக மக்களிடம் இருந்து மக்களுக்காக உருவான இயக்கம். பெரியார், அண்ணா, கலைஞரின் ரத்தம். இந்த இயக்கத்தை தொட்டுப்பார்க்க வேண்டும், சீண்டி பார்க்க வேண்டும் என நினைத்தாலே தமிழ்நாடு பதிலடி கொடுக்கும் என்ற பயத்தால் எதிரிகள் அஞ்சி நடுங்குகின்றனர். திமுகவைப் போல் அமைப்பு ரீதியான வலுவான அரசியல் கட்சியை யாராலும் காட்ட முடியாது. இப்போது நாம் காட்டுவது எல்லாம் வெறும் டிரைலர் தான். திருச்சியில் மெயின் பிக்சர் காண்பிக்க தயாராகி வருகிறோம்.

திருச்சியில் மார்ச் 9ல் பத்து லட்சம் பேர் திரள்வார்கள். திருவண்ணாமலை தொடங்கி அடுத்த மாதம் திருச்சி மாநாடு வரை 3 மாதத்தில் 20 முதல் 25 லட்சம் பேரை சந்திக்க உள்ளேன். நாம் ரெக்கார்டு செய்தால், அது யாராலும் உடைக்க முடியாத ரெக்கார்டாக இருக்க வேண்டும். பெரிய மாநாடு மட்டும் அல்ல, ஒவ்வொரு நாளும் காலை, மாலை என பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறேன்.

எந்தப் பக்கம் திரும்பினாலும் கருப்பு சிவப்பு கொடிதான் தெரிகிறது. திமுக கொள்கைகள்தான் எல்லா இடங்களிலும் எதிரொலிக்கிறது. திராவிட மாடல் அரசின் சாதனைகள் உரக்கக் கேட்கிறது. இதுதான் கள நிலவரம். தெற்கு சீமையில் மொத்த தொகுதிகளிலும் திமுக கூட்டணிதான் வெற்றி பெற வேண்டும். அனைத்து தொகுதிகளையும் தட்டி தூக்க வேண்டும்.



திமுக கூட்டணி 2019 முதல் எல்லா தேர்தல்களிலும் வெற்றி பெற்று வருகிறது. 2024 எம்பி தேர்தலில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாதபடி முழுமையாக வெற்றிபெற்றோம். அப்போதை விட இப்போது அதிக திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். மக்கள் கேட்காத திட்டங்களையும் வழங்கி இன்ப அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளோம். அனைத்து தரப்பினரின் கோரிக்கைகளையும் தீர்த்து வைத்துள்ளோம். இதனால் இந்த தேர்தலில் உங்கள் மூலம் மிகப் பெரிய வெற்றியை எதிர்பார்க்கிறோம்.

மக்களின் மகிழ்ச்சி, உடன்பிறப்புகள் மீது நம்பிக்கை வைத்து இதை சொல்கிறேன். நீங்கள் இருக்கும் போது எனக்கு எதைப்பற்றியும் கவலையில்லை. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்போம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அனைத்து பகுதிகளிலும், அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்றோம் என்ற செய்திதான் மிக மிக முக்கியம். அதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். அதற்காகத்தான் இந்தக் கூட்டங்கள், மாநாடுகள்.

ஒவ்வோரு பூத்துக்கும் 350 வாக்குகள்தான் டார்க்கெட். இதை நிறைவேற்றினாலே 2.60 கோடி வாக்குகளை வாங்க முடியும். 2.50 கோடி வாக்குகளுக்கு குறையாமல் வாக்குகளை வாங்க வேண்டும். இதை வாங்கிக் காட்ட வேண்டியது உங்கள் பொறுப்பு. உங்களுக்கு தேவையானதை செய்து தருவது என் பொறுப்பு. ஆளுக்கு 40 அல்லது 50 வாக்குகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். இலக்கை நிறைவேற்றிவிடலாம். 200 தொகுதிகள் நிச்சயம், 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவது நம்முடைய லட்சியம். அடுத்த 2 மாதம் உங்களுக்கும், எனக்கும் ஓய்வில்லை. ஒவ்வொரு வாக்காளர்களையும் குறைந்தது 5 முறையாவது நேரில் சந்திக்க வேண்டும்.

என்னதான் வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் வந்தாலும் வீடு வீடாக படியேறி சென்று கையெடுத்து கும்பிட்டு வாக்குகள் கேட்பதற்கு ஈடாகாது. ஆன்லைன் செயல்பாடு முக்கியம்தான். அதை மறுக்கவில்லை. களத்தில் வேலை செய்தால்தான் மதிப்பு இருக்கும். பரம்பரை பரம்பரையாக திமுகவுக்கு வாக்களிக்கும் குடும்பமாக இருந்தாலும், இதுவரை வாக்களிக்காத குடும்பமாக இருந்தாலும் பிரச்சாரத்தின் கடைசி நிமிடம் வரை மக்களை சந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

சாதனைகளை சொல்லி, வாக்குறுதிகளை சொல்லி ஓட்டு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இதை திரும்ப திரும்ப செய்தால் நமக்கு வெற்றியும் திரும்ப கிடைக்கும். வாக்காளர்கள் பூத்துக்கு வந்து வாக்களிக்கும் வரை ஓய்வே இருக்கக்கூடாது. பணிவாக, கனிவாக, மரியாதையாக, நட்பாக அணுக வேண்டும். மக்கள்தான் எஜமானர்கள். நாம் அவர்களின் சேவகர்கள். மக்களை சந்தித்து, அவர்களின் இன்ப, துன்பங்களின் போது கூடவே நிற்பதால்தான் அவர்களும் நம்முடன் நிற்கிறார்கள்.

75 ஆண்டுகளாக திமுக வலிமையாக நிற்க இதுதான் ரகசியம். வாக்குப்பதிவு முடிந்து சீல் வைத்து வண்டியில் ஏற்றும் வரையும், கடைசி வாக்கு எண்ணி முடிக்கும் வரை கவனமாக இருக்க வேண்டும். தேர்தல் தேதியை எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கட்டும். நாம் எப்போதோ பரப்புரையை தொடங்கிவிட்டோம்.

ஸ்டாலின் மகளிர் படை மூலம் அரசின் சாதனைகளை வீடு வீடாக கொண்டுச் செல்ல சொல்லியிருக்கிறேன். குறிப்பாக தேர்தலை காரணமாக வைத்து மகளிர் உரிமை தொகையை முடக்க நினைத்த சதியை முறியடித்து மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வழங்கியதையும், அடுத்து வரும் ஆட்சியில் ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்க இருப்பதையும் வீடு வீடாக சொல்ல கூறியிருக்கிறேன்.

திரவிட மாடல் ஆட்சியில் பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என சமூகத்தில் அனைத்து தரப்பினரையும் கவனத்தில் கொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். அதனால் தமிழகம் வரலாறு காணாத வளர்ச்சி பெற்றுள்ளது. இது எதிரிகளின் கண்களை உறுத்துகிறது. இந்த ஆட்சி தொடர்ந்தால் தான் மகளிர் உரிமை தொகை போன்ற சமூக வளர்ச்சித் திட்டங்கள் தொடரும் என்பதை மக்களை உணர வைக்க வேண்டும்.

அண்மையில் மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வழங்கியதை சர்ஜிக்கல் ஸ்டிரைக் என்றனர். அந்தளவு எதிரிகள் கணிக்க முடியாதபடி நம் செயல்பாடுகள் இருந்தது. மத்திய அரசு மீது இருக்கும் பயத்தால் ரூ.5 ஆயிரத்தை உடனடியாக எடுக்க பெண்கள் வங்கிகளுக்கு படையெடுத்தனர். மக்களுக்கு பணம் கொடுத்தால் அது திமுக அரசு, பணத்தை பறித்தால் பாஜக அரசு. இதை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இலவச பேருந்து திட்டத்தால் மெட்ரோ ரயில் பயணிகள் எண்ணிக்கை குறைந்துள்ளதாக பிரதமர் மோடி பேசிய பழைய வீடியோ வைரலாகி வருகிறது. திமுக அரசின் மகளிர் இலவச பேருந்து பயணத்தால் ஒவ்வொரு பெண்களும் மாதம் ரூ.800 வரை சேமிக்கின்றனர். இது பிரதமருக்கு வலிக்கிறது.

பிரதமர் மோடி மார்ச் 1ல் மதுரை வருகிறார். அவரிடம் மதுரை, கோவைக்கு ஏன் மெட்ரோ ரயில் வரவில்லை? தமிழகத்துக்கு ஏன் எந்த சிறப்பு திட்டமும் தரவில்லை? கீழடி அறிக்கையை ஏன் வெளியிடவில்லை? எய்ம்ஸ் ஏன் வரவில்லை? நீட் விலக்கு ஏன் தரவில்லை? கல்வி நிதியை முடக்குவது நியாயமா என மக்கள் கேட்க வேண்டும்.

நியாயமாக எதிர்கட்சித் தலைவர் பழனிச்சாமி, தமிழ்நாட்டின் உரிமைக்காக குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் கோரிக்கையாக கூட கேட்க துணிச்சல் இல்லாத துரோகியாக மாறி விட்டார். பழனிச்சாமி போல் பயந்தாகொள்ளி இல்லை நான். ஆட்சி, பதவி இல்லை, உயிரே போனாலும் கவலைப்படமாட்டோம். வழக்கு போட்டால் போடு, நாங்கள் பார்க்காத மிசாவா, தடாவா?

இந்தியாவில் இருக்கும் எதிர்கட்சிகளில் திமுக மீது தான் பாஜக அதிகளவில் ரெய்டு நடத்தியது. நம் அமைச்சர்களுக்கு அதிகளவில் அழுத்தம் கொடுக்கிறார்கள். ஆட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்த பார்க்கிறார்கள். எமர்ஜென்சியை பார்த்த இயக்கம் திமுக. சிபிஐ, ஈ.டி, ஐடி என எந்த சித்து விளையாட்டுகளுக்கும் அஞ்சமாட்டோம். அதற்கு வேறு ஆளை பாருங்கள். என்ன ஆனாலும் ஒரு கை பார்ப்போம். எழுந்து நிற்போம்.

தமிழ்நாட்டின் உரிமைக்காக போராடுவதால் மக்கள் ஆதரவு அளிக்கின்றனர். அதனால் எல்லா தேர்தல்களிலும் ஜெயிக்கிறோம். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். அதை புத்தகமாக அளித்துள்ளோம். அதை மக்களிடம் அளித்து வாக்கு சேகரியுங்கள்.

இந்தியாவில் எந்த மாநிலமும் எட்ட முடியாத வளர்ச்சியை பெற்றுள்ளோம். சாதனை செய்யாத நாளே கிடையாது. தினமும் ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். எனக்கே நினைவில் வைக்க முடியாத அளவில் சாதனைகள் மறந்துவிடுகிறது. இதனால் சாதனைகளை தெரிந்து கொண்டு மக்களிடம் நினைவுபடுத்துங்கள்.

தேர்தல் பணியில் நாம்தான் முன்னணியில் உள்ளோம். கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருகின்றன. தொகுதி பங்கீடு பேச குழு அமைக்கப்பட்டுள்ளது. யாருக்கு எந்த தொகுதி, யார் வேட்பாளர்கள் என்பதை தலைமை கழகம் பார்த்துக்கொள்ளும். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். அறிவிக்கும் வேட்பாளர்களை வெற்றி பெற வைக்க வேண்டியது உங்களின் கடமை. நம் கட்சி வேட்பாளர் மட்டும் அல்ல, கூட்டணி கட்சியின் வேட்பாளர்களையும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க கடுமையாக உழைக்க வேண்டும். நம் களப்பணியை பார்த்து கூட்டணி கட்சியினர் வியக்க வேண்டும்.

தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என கேள்வி எழுப்புங்கள். தமிழ்நாடு ஜெயிக்க வேண்டும் என்றால் திமுக கூட்டணி ஜெயிக்க வேண்டும். அடிமை அதிமுகவும், தமிழ் விரோத பாஜகவும் அனைத்து தொகுதிகளிலும் டெபாசிட் இழக்க வேண்டும். நான் மீண்டும் முதல்வராக வர வேண்டும். தமிழ்நாடு எல்லா துறைகளிலும் தொடர்ந்து முன்னணியில் இருக்க வேண்டும்.

இந்தி திணிப்பை எதிர்க்க, மாநில சுயாட்சியை நிலைநாட்ட, மக்கள் நலத்திட்டங்கள் தொடர, தமிழ்நாடு எப்போதும் அமைதியான மாநிலமாக இருக்க, தமிழ்நாட்டின் வளர்ச்சி பயணம் தொடர, எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க, தமிழ்நாட்டின் சுயமரியாதையை காத்திட, தமிழ்நாடு தலைகுனியாமல் இருக்க, பாசிச பாஜகவை வெல்ல, அடிமை அதிமுகவுக்கு பாடம் கற்பிக்க, இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்ட எல்லோரும் சொல்வோம் வெல்வோம் ஒன்றாக" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## திமுக தேமுதிக கொள்ளை அடிப்பதற்கான கூட்டணி": ராஜேந்திர பாலாஜி விமர்சனம்

சிவகாசி, பிப்.22-

"திமுக தேமுதிக கொள்கை ரீதியிலான கூட்டணி அல்ல, கொள்ளை அடிப்பதற்கான கூட்டணி" என அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்.

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதியில் திமுக ஆட்சிக்கு எதிராக வீடு வீடாகச் சென்று முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்த பின்னர், தேமுதிகவின் கொள்கை மற்றும் கடந்த காலங்களில் திமுக குறித்து விஜயகாந்த், பிரேமலதா, விஜய பிரபாகரன் பேசிய பேச்சுகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. அந்த பேச்சுகளை பார்த்தால் இந்த கூட்டணி சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

திமுக ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கில் லட்சிய கூட்டணியை அதிமுக அமைத்து உள்ளது. திமுக ஆட்சியில் அத்தியாவசிய குடும்ப செலவு இரண்டு மடங்கு உயர்ந்து உள்ளது. கோடைக்கு பணம் கொடுத்துள்ளேன் என கூறுவது மக்களை ஏமாற்றும் நாடகம். பொய்யைச் சொல்லி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக அவர்கள் செய்த வேலைதான், தேமுதிகவை வளைத்த வரலாறு.

திமுக தேமுதிக கொள்கை ரீதியிலான கூட்டணி அல்ல, கொள்ளை அடிப்பதற்கான கூட்டணி. திமுக தேமுதிகவை எப்படி வளைத்தது என்ற வரலாறு சமூக வலைதளங்களில் அழகாக வந்து கொண்டிருக்கிறது. கேப்டன் எதற்காக கட்சியை ஆரம்பித்தார், அதற்கு மாறாக கூட்டணி சேர்ந்து விட்டு பிரேமலதா சொல்லும் காரணத்தை ஏற்காத தொண்டர்கள் அதிமுகவில் இணைந்து வருகின்றனர்.

திமுக ஆட்சியில் ஒவ்வொரு தனி மனிதனும் பாதிக்கப்பட்டு உள்ளார். மீண்டும் திமுக ஆட்சிக்கு வரும் என முதல்வர் கூறுவது பகல் கனவு. அதிமுக கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. அரசு ஊழியர்கள் முதல் பட்டாசு தொழிலாளர்கள் வரை பாதிக்கப்பட்டு உள்ளனர். திமுக ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டால் தான் தமிழக அரசின் நிதி நிலைமை மோசமானது. 75 ஆண்டுகாலமாக தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.4.5 லட்சம் கோடி கடன் வாங்கிய நிலையில், ஸ்டாலின் அரசு 5 ஆண்டுகளில் 5 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளது.

திட்டமிட்டு பொய்யை சொல்லி கடன் வாங்கி, அதில் லாபம் சம்பாதிக்கும் வேலையை இந்த அரசு செய்துள்ளது. இது படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரை தெரிந்துள்ளதால் அவர்கள் திமுகவிற்கு வாக்களிக்க மாட்டார்கள். மக்கள் நலனில், தேசிய நலனில் அக்கறை கொண்ட அதிமுக பாஜக கூட்டணிக்கு தான் மக்கள் வாக்களிப்பார்கள்.

திமுகவை எதிர்த்து தான் எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கி அரசியல் செய்தார். அதே திமுக எதிர்ப்பில் தான் ஜெயலலிதா தேர்தலை எதிர்கொண்டு வெற்றி பெற்று முதல்வரானார். அதிமுகவின் கொள்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பவர்களை (ஓ.பன்னீர்செல்வம்) சுயநலவாதிகள் என்றுதான் தமிழகம் சொல்லும்.

தவெக பரிதாபமான நிலையில் உள்ளது. அவர்களை யாருமே கண்டு கொள்வது கிடையாது. ஒரு நாள் கூத்துக்கு தவெக தாங்காது. அதிமுக, திமுக கூட்டணி மட்டுமே களத்தில் நிற்கும். தனித்து நின்று 27 ஆயிரம் ஓட்டு வாங்கியவர்களுக்கெல்லாம் (மாணிக்கம் தாகூர்) அதிமுக பதில் கூற முடியாது. காங்கிரஸ் கட்சி எதுவும் இல்லாமல் வேடிக்கை காட்டுகிறது. அவர்கள் பேச்சை வேடிக்கையாகவே எடுத்துக் கொள் ள வேண்டும்.

அமலாக்கத்துறை பலமுறை கடிதம் அனுப்பியும் அமைச்சர் கே.என்.நேரு மீது வழக்கு பதிவு செய்யாத திமுக அரசுக்கு உயர் நீதிமன்றம் குட்டு வைத்துள்ளது. தேடித்தேடி பொய் வழக்கு போடும் தமிழக காவல்துறை, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் அமைச்சர் நேரு மீது வழக்கு பதிவு செய்யாமல் உள்ளது. திமுகவினரும், அமைச்சர்களும் செய்யும் தவறுகளை தட்டிக் கேட்காமல், தட்டிக் கொடுக்கும் வேலையை தலைமை செய்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## லாலுவை திருதராஷ்டிரருடன் ஒப்பிட்டு கிண்டலடித்த பாஜக எம்எல்ஏ மைதிலி தாக்கூர்

பாட்னா, பிப்.22-

பிஹார் மாநிலத்தின் பாஜக எம்எல்ஏ மைதிலி தாக்கூர்(25). நாட்டின் மிக இளம் வயது எம்எல்ஏ இவர்தான். இவர் பிஹார் சட்டப்பேரவையில் நேற்று பேசியதாவது:

2005ம் ஆண்டுக்கு முன்பு இருந்த காலத்தை நான் நினைத்து பார்க்கும்போதெல்லாம், மகாபாரதத்தில் அஸ்தினாபுரத்தை மன்னர் திருதராஷ்டிரர் ஆண்டதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. மன்னருக்கு பார்வையில்லை. அதனால் அவர் எதையும் பார்க்க விரும்பவில்லை. அவருக்கு ஹஸ்தினாபுரத்தை பற்றி கவலையில்லை. அவருக்கு மகன் துரியோதனன் மட்டுமே முக்கியம்.





பிஹார் மாநிலம் 20 ஆண்டுகளுக்கு முன்பு கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. அதனால் பல தலைமுறையினர் இன்னும் கஷ்டப்படுகின்றனர். அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் கண்களையும், காதுகளையும் கட்டிக் கொண்டனர். பிஹாரில் மாலை 6 மணிக்கு மேல் வெளியே சென்றால் ஆபத்து என மக்கள் கூறுவார்கள்.

ஆனால் இன்று அதிகாலை 3 மணிக்கு தர்பங்காவிலிருந்து புறப்பட்டு பாட்னாவில் எனது வீட்டுக்கு நான் பாதுகாப்பாக செல்கிறேன். இந்த மாற்றம் முதல்வர் நிதிஷ் குமாரின் சிறந்த நிர்வாகத்தால் ஏற்பட்டுள்ளது. முதல்வர் நிதிஷ் குமார் கடந்த 2006ம் ஆண்டு 9ம் வகுப்பு மாணவிகளுக்கு சைக்கிள் வாங்க நிதி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

அதன்பின்புதான் எனது மதுபானி கிராமத்தில் பெண் குழந்தைகள் பள்ளிக்கு செல்ல தொடங்கினர். பிஹாரின் புதல்வி உண்மையை எடுத்துக் கூறினால், எதிர்க்கட்சியினர் கூச்சலிடுகிறார்கள். இவ்வாறு மைதிலி தாக்கூர் பேசினார்.



# மழைநீர் சேகரிப்பு பற்றி வேளாண் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு

தஞ்சாவூர், பிப்.22-
தஞ்சாவூர் திருவையாறு அருகே கீழபுனவாசல் கணோசா மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியில் உசிலம்பட்டிஆர்.வி.எஸ் வேளாண்மைக் கல்லூரி 4 ம் ஆண்டு மாணவிகளின் கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் மழை நீரை சேமிப்போம் பூமியை பாதுகாப்போம் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ஆர்.வி. எஸ் வேளாண்மைக் கல்லூரி இயக்குநர் முனைவர் பாண்டியராஜன், முனைவர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண் திட்ட பொறுப்பாளர்கள் சுந்தரவடிவு, உதவி பேராசிரியர் அருண்குமார் ஆகியோர் அறிவுறுத்தலின்படி குழு ஒருங்கிணைப்பாளர்கள் இணை பேராசிரியர் கற்பகவல்லி, உதவி பேராசிரியர் இராமலிங்கம் ஆகியோர் வழிகாட்டுதலின் படி கல்லூரி மாணவிகள் பிரியதர்ஷினி, புனிதா, ரெஜோலின் மேரி, ரக்ஷனா, ரம்யா, ரித்தியநந்தினி, சங்கவி, சரணியா, ஷியாமாஜிமிரா, ஸ்ரீதர்ஷினி உள்ளிட்ட மாணவிகளின் மழைநீர் சேமிப்போம், பூமியை பாதுகாப்போம் என்பது குறித்து விழிவுணர்வு பேரணி நடைபெற்றது.

# சாய்ராம் கல்வி நிறுவனங்களில் சர்வதேச செயற்கை நுண்ணறிவு ஹாக்கத்தான் போட்டி, 2,000 மாணவர்கள் பங்கேற்றனர்

தாம்பரம், பிப்.22-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அருகே சாய்ராம் கல்வி நிறுவனங்களில், சர்வதேச அளவிலான பில்ட்டு கெதர் செயற்கை நுண்ணறிவு நிலைத்த வளர்ச்சி ஹாக்கத்தான் போட்டி ஸ்ரீ சாய்ராம் கல்வி நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து தலைமையில் நடைபெற்றது.

சுவிட்சர்லாந்தின் இ.டி.எச். சூரிச் மற்றும் சிங்கப்பூரின் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஆகிய வற்றின் இணைப்பில், 24 மணி நேர தொடர்ச்சியான ஹாக்கத்தான் பிப்ரவரி 18 முதல் 20 வரை நடத்தப்பட்டது.




ஐக்கிய நாடுகள் அமைப்பு முன்வைத்துள்ள நிலைத்த வளர்ச்சி இலக்குகளை மையமாகக் கொண்டு, சமூகத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் நடைமுறை தீர்வுகளை உருவாக்குவதே இந்த நிகழ்ச்சியின் முதன்மை நோக்கமாகும்.

மாணவர்களின் புதுமை முயற்சிகளை பாராட்டி ஊக்கமளித்தனர். மேலும், பில்ட் டு கெதர் கல்வி இயக்கத்தின் தலைவர் மற்றும் நான்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சான் யங் பார்க், பில்ட் டு கெதர் இயக்குநரும் ஹார்வர்டு வணிகப் பள்ளியுடன் தொடர்புடையவருமான சிரில் கிரம்பெக் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறந்த அணிகளுக்கு பரிசுகள் வழங்கினர்.

இந்த ஹாக்கத்தானில், 2,000 மாணவர்கள் பங்கேற்றனர். அவர்கள் 24 மணி நேரம் இடைவிடாமல் செயல்பட்டு, சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நகர்ப்புற மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் புதுமையான செயற்கை நுண்ணறிவு தீர்வுகளை வடிவமைத்தனர்.

மாணவர்கள் அணிகளாக இணைந்து, சமூகப் பிரச்சினைகளை ஆய்வு செய்து, அவற்றிற்கான செயலிகள் மற்றும் மாதிரிகளை உருவாக்கினர். சிந்தனை வடிவமைப்பு மற்றும் பிரச்சினை தீர்வு முறைகளின் மூலம், தொழில்நுட்ப அறிவை சமூக நலத்துடன் இணைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த போட்டியில் 500க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்ற நிலையில், சிறந்த திட்டங்களை வழங்கிய அணிகள் இறுதிச்சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டன. அவற்றில் முதல் 120 அணிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், வெற்றி பெற்ற அணிகளுக்கு ரூ. 10 லட்சம் பரிசுத் தொகையுடன் 154 பரிசுகள் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டது.

இந்த சர்வதேச ஹாக்கத்தான் மூலம், மாணவர்கள் புதுமை சிந்தனை, தொழில்நுட்ப திறன் மற்றும் சமூகப் பொறுப்புணர்வை ஒருங்கிணைக்கும் அரிய வாய்ப்பை பெற்றதாகஉ கல்வி நிறுவன நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# பழனி தனியார் மஹாலில் 2026 யோகா சேம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது

திண்டுக்கல், பிப்.22-
திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரப் பகுதியில் உள்ள தனியார் மஹாலில் தமிழ்நாடு மாநில யோகா ஸ்போர்ட்ஸ் சங்கம். திண்டுக்கல் மாவட்ட யோகா ஸ்போர்ட்ஸ் சங்கம் இணைந்து 2026 ஆம் ஆண்டு யோகா ஸ்போர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டி அரிமா சுப்புராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது மேலும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பழனி காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன்பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்வில் திண்டுக்கல் மாவட்டம் சுற்றுவட்டாரத்தில் இருந்துசுமார் 500க்கு மேற்பட்டோர் மாணவ மாணவிகள்வருகை புரிந்து தங்களுடைய தனித்திறமைகளை வெளிப்படுத்தினர்.



மேலும் ஆன்மாவை கடவுளுடன் இணைத்து, உடலையும் மனதையும் மேம்படுத்தும் யோகாவில் முக்கியமாக 7 வகைகள் உள்ளன. அவை: ஹத யோகா, ராஜ யோகம், கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகா, தந்திர யோகா மற்றும் மந்திர யோகா. இந்த யோக வகைகள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஏற்ற வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன

மற்றும் போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள் பல்வேறு விதமான ஆசனங்களை செய்து அசத்தியுள்ளனர்.



# உலக தாய்மொழி நாள் உறுதிமொழி தின அனுசரிப்பு

தேனி, பிப்.22-
உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.சினேஹா ப்ரியா, தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் இணைந்து "எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எப்போதும் தமிழ் என்ற நடைமுறைக் கொண்டுவர பாடுபடுவோம். தேமதுர தமிழோசை உலகமெங்கும் ஒலிக்க எந்நாளும் உழைத்திடுவோம்.

அனைத்து ஆவணங்களிலும் தமிழிலே கையொப்பமிடுவோம். குழந்தைகளுக்கு தமிழ் மொழியில் பெயர் சூட்டட பரப்புரை செய்திடுவோம். இணையற்ற தமிழுடன் இணையத் தமிழையும் காத்து வளர்ப்போம் என்று உலகத் தமிழ்மொழி நாளான இன்று உளமாற உறுதி கூறுகிறேன். என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மேலும் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் உலக தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்றனர்.

# காவேரிப்பட்டினம் பூங்காவனத்தம்மன் கோயிலில் மயானசூறை மற்றும் மகா சிவராத்திரி விழா

## புஷ்ப பல்லக்கில் சிம்ம வாகன உற்சவமாக அம்மையப்பன் வீதியுலா

கிருஷ்ணகிரி, பிப்.22-
கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தாம்சன் பேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீ பூங்காவனத்தம்மன் கோயில் வளாகத்தில் மயானசூறை மற்றும் மகா சிவராத்திரி விழா பக்தி பரவசத்துடன் வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவை முன்னிட்டு கோயில் முழுவதும் மின் விளக்குகள் மற்றும் அலங்காரத் தோரணங்களால் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.





நேற்று காலை நடைபெற்ற மஞ்சள் நீராட்டு விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். பக்தர்கள் ஆரத்தி எடுத்தும், மலர் சமர்ப்பித்தும் நேர்த்திக்கடன் செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நையாண்டி மேளத் தாளத்துடன் புஷ்ப பல்லக்கில் சிம்ம வாகன உற்சவமாக அம்மையப்பன் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

விழாவையொட்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து வந்த பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்ததால் நிகழ்ச்சி அமைதியான முறையில் நிறைவுற்றது. மகா சிவராத்திரி நாளை முன்னிட்டு பக்தர்கள் இரவு முழுவதும் ஜெபம், அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகளில் ஈடுபட்டு இறைவனை வழிபட்டனர்.





# காவேரிப்பட்டினத்தில் பாஜக அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை: சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தெருமுனை பிரச்சாரம் தொடக்கம்

கிருஷ்ணகிரி, பிப்.22-
கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினர். ஒன்றிய தலைவர் சக்திவேல், மாநில செயற்குழு உறுப்பினர் பெரியசாமி உள்ளிட்டோர், கே.பி. முனுசாமி அவர்களை நேரில் சந்தித்து தெருமுனை பிரச்சாரம் தொடங்குவது குறித்து கருத்து கேட்டனர்.

இந்த சந்திப்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்டது. இதில் அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் பையூர் ரவி, இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார், மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வரும் தேர்தலில் வாக்காளர்களை நேரடியாக சந்தித்து கட்சியின் திட்டங்கள் மற்றும் அரசியல் நிலைப்பாடுகளை எடுத்துரைப்பதற்காக கிராமம் தோறும் தெருமுனை பிரச்சா ரங்களை விரைவில் தொடங்க முடிவு செய்யப்பட்டதாக நிர்வாகிகள் தெரிவித்தனர். தேர்தல் பணிகளை ஒழுங்குபடுத்துதல், பிரச்சார அட்டவணை அமைத்தல், இளைஞர் மற்றும் பெண்கள் பங்கு பற்றலை அதிகரி த்தல் போன்ற விஷயங் களும் ஆலோச னையில் பேசப்பட்டதாக கூறப்படுகிறது.





■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள், தலைமையில் அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. நாராயணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தவெக தேர்தல் கண்காணிப்பாளர்களை நியமித்தார் விஜய்

சென்னை, பிப்.22–
சட்டப்பேரவைத் தேர்தல் பணிகளை மேற்கொள்ள, தவெக சார்பில் தேர்தல் கண்காணிப்பாளர்களை நியமித்து அக்கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தவெக தலைவர் விஜய் வெளியிட்ட அறிக்கையில், "வருகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில், தேர்தல் பணிகளைக் கண்காணிக்க, சட்டமன்றத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். சட்டமன்றத் தேர்தல் முதன்மைக் கண்காணிப்பாளர்களாக என். ஆனந்த், கே.ஏ. செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா நியமிக்கப்பட்டுள்ளனர். எனது நேரடி ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி இந்தத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இயங்குவார்கள்.

தலைமைக் கழக மையத் தேர்தல் அலுவலகத்தின் (Headquarters Central War Room) துணையுடன் தலைமைக் கழகம் அளிக்கும் நெறிமுறைகளுக்கு உள்பட்டு இவர்கள் செயல்படுவார்கள். குறிப்பாக, மாவட்ட வாரியாகவும் தொகுதி வாரியாகவும் தேர்தல் முன் தயாரிப்புப் பணிகள் மற்றும் செயல்வீரர்கள் கூட்டங்களை இவர்கள் ஒருங்கிணைப்பார்கள்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களுக்கு ஆதவ் அர்ஜுனாவும், சேலம் மாவட்டத்துக்கு அருண்ராஜ் உள்ளிடோரும் தேர்தல் கண்காளிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர்கள் சங்கத்தினர் காத்திருப்பு போராட்டம்

கிருஷ்ணகிரி, பிப்.22-
கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர்கள் சங்கத்தினர் நேற்று இரண்டாவது நாளாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிருஷ்ணகிரி தாசில்தார் அலுவலகம் வளாகத்தில், கிருஷ்ணகிரி வட்டக்கிளை தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கம் சார்பில், வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் உள்ளிட்ட 3 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முன்தினம் முதல் (பிப். 19) காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இரண்டாவது நாளாக நேற்று நடந்த காத்திருப்பு போராட்டத்திற்கு வட்டத் தலைவர் இளையவன் தலைமை வகித்தார். இதில், மாவட்ட பொருளாளர் ராஜேஷ்கண்ணா, மாவட்ட மகளிர் அணி தலைவி விஜயலட்சுமி, வட்ட செயலாளர் கணேசன், வட்ட பொருளாளர் சிவகாமி, வட்ட துணைத் தலைவர் குமரேசன், வட்ட கிளை செயலாளர் தமிழரசன், மாவட்ட குழு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட அனைத்து வட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அப்போது அவர்கள் கூறுகையில், தமிழக அரசு தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கம் சார்பில் வைக்கப்பட்டுள்ள 3 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வரை காலவரையற்ற காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை மற்றும் வாரியத்தின் சார்பாக செயல்படும் நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு கூட்டம் கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர்.விஜிலாசத்தியானந் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. உடன், நல வாரிய உறுப்பினர்கள் ரோஸ்லின் ஜீவா, இமானுவேல், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.க்ரிதி காம்னா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி. பத்மலதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## அரியலூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சாசி.சிவசங்கர் வழங்கினார்

பெரம்பலூர், பிப்.22-

அரியலூர் மாவட்டம் அரியலூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தையும் அன்றாடப் பயணத்தையும் எளிதாக்கும் வகையில், 100 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.1,01,80,000 மதிப்பீட்டில் (தலா ரூ.1,01,800 வீதம்) இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சாசி.சிவசங்கர் வழங்கினார். தொடர்ந்து அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் கோட்டத்தில் பணியாற்றி மறைந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஆதரவளிக்கும் வகையில், 127 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் அரியலூர் அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் பணி நியமன ஆணைகளை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார். இதில் ஓட்டுநர்களாக 4 பேரும், நடத்துநர்களாக 122 பேரும், தொழில்நுட்பப் பணியாளராக ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக 52 மகளிர் நடத்துநர்களாகப் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, அரியலூர் சட்ட மன்ற உறுப்பினர் சின்னப்பா, ஜெயங் கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கண்ணன், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், அரசு போக்குவரத்து கழக கும்பகோணம் கோட்ட மேலாண் இயக்குனர் தசரதன், அரசு அலுவலர்கள், திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மாசி பெருவிழா பிரம்மோற்சவம் கொடியேற்றத்துடன் 11 நாட்கள் நிகழ்ச்சி தொடங்கியது

திருத்தணி, பிப்.22-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் முருகப்பெருமானின் பிரசித்தி பெற்ற ஐந்தா படை திருக்கோயிலாகும் இந்த திருக்கோயிலில் மாசி பெருவிழா.



நிகழ்ச்சி பிப்ரவரி 21 சனிக்கிழமை இன்று காலை மலை கோவிலில் சிறப்பு பூஜை உடன் கொடியேற்றம் நடைபெற்றது மகா தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது இந்நிகழ்ச்சியை தொடர்ந்து உற்சவர் முருகப்பெருமான் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இந்த பிரமோற்சவ நிகழ்ச்சியில் 11 நாட்கள் உற்சவர் முருகப்பெருமான் காலை மற்றும் இரவு வேலைகளில் யானை வாகனம் புலி வாகனம் வெள்ளி வாகனம் போன்ற வாகன சேவையில் பக்தர்களுக்கு எழுந்துருளி காட்சியளிப்பார் உற்சவர் முருகப்பெருமான் இதனை தொடர்ந்து மார்ச் ஒன்றாம் தேதி இந்நிகழ்ச்சியில் முக்கிய நிகழ்வான வள்ளியம்மை முருகப்பெருமான் திருக்கல்யாணம் திருக்கோயிலில் நடைபெற உள்ளது இந்நிகழ்ச்சியில் நள்ளிரவு முருகப்பெருமான் குதிரை வாகன சேவையில் எழுந்தருளி பக்தர்களுக்கு திருக்கோயில் மாடவீதியில் அருள் பாலிப்பார் இந்த 11 நாட்கள் நிகழ்ச்சியில் ஏற்பாடுகளை திருக்கோயில் நிர்வாகம் செய்துள்ளனர்.

## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தை அடுத்த மண்ணிவாக்கத்தில் பாஜக சார்பில் கலப்பு திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினர்

மண்ணிவாக்கம், பிப்.22-



செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கத்தில்சமூக நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில், பாரதிய ஜனதா கட்சி சார்பில் கலப்பு திருமண விழா சிறப்பாக நடைபெற்றது.

சமூக நல நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த செங்கல்பட்டு மக்கள் நேச காவலர் குரல் மாவட்ட நிருபர் செய்தியாளர் வி.எம்.விஸ்வநாதன் சாந்தி அவர்களின் இல்ல திருமண விழா மணமக்கள் எஸ்.தினேஷ் குமார் சிவசங்கரி கலப்பு திருமண விழா, நிகழ்ச்சி மண்ணிவாக்கம் பகுதியில் உள்ள ஸ்ரீ முருகன் கோவில் வளாகத்தில் தாம்பரம் மேற்கு மண்டல் தலைவர் எஸ்.ராஜா அவர்களின் வழிகாட்டுதல் படி பொதுச் செயலாளர் பாலாஜி சந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் விழா நடைபெற்றது.

இந்த விழாவில், பாஜக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் சிங்கை ரகுராமன் மற்றும் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட முன்னாள் தலைவர் வேதா சுப்ரமணியம் ரத்தினம், நடராஜன், எஸ்.முருகன், டி.ஆர்.சவுக்கர் தாலி ஆகியோர் கலந்து கொண்டு மணமக் களுக்கு பூங்கொத்து வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தனர். மேலும், தம்பதிகள் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என அவர்கள் ஆசீர்வதித்தனர்.

கலப்பு திருமணங்கள் சமூக ஒற்றுமையையும், சாதி மற்றும் மத வேறுபாடுகளை தாண்டிய மனிதநேயத்தையும் வளர்க்கும் என்பதால், இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும் என கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சி, சமூக நல்லிணக்கம் மற்றும் சமத்துவத்தை வலியுறுத்தும் ஒரு முக்கிய முயற்சியாக பொதுமக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுள்ளது.

மண்ணிவாக்கத்தில் நடைபெற்ற இந்த கலப்பு திருமண விழா, சமூக மாற்றத்திற்கான ஒரு முன்னோடியான முயற்சியாக பார்க்கப்படுகிறது.



## 8 விரைவு ரயில்கள் தற்காலிகமாக மாம்பலம் ரயில் நிலையத்தில் ஏப்.5 வரை நின்று செல்லும்: தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, பிப்.22-

8 விரைவு ரயில்கள் தற்காலிகமாக மாம்பலம் ரயில் நிலையத்தில் ஏப்.5 வரை நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. எழும்பூர் திருச்சி செல்லும் சோழன் விரைவு ரயில், எழும்பூர்குமரி செல்லும் விரைவு ரயில் எழும்பூர் புதுவை, செங்கோட்டை, நெல்லை, மதுரை, மன்னார்குடி, சேலம் செல்லும் விரைவு ரயில்கள் மாம்பலத்தில் நின்று செல்லும்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் தொடர்ச்சியாக மறுசீரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக வருகிற 20ந்தேதி முதல் எழும்பூர் ரயில் நிலையத்தில் மின்சார ரயில்கள் 5, 6வது நடைமேடைகளில் இருந்து இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்திருக்கிறது.

கடந்த 8ந்தேதி முதல் இன்று வரையில் 10 நாட்கள் இரவு 9 மணி முதல் அதிகாலை 5 மணி வரையில் மின்சார ரயில்கள், எக்ஸ்பிரஸ் ரயில் நடைமேடை 5, 6ல் இருந்து இயக்கப்பட்டு வருகிறது. தற்போது மறுசீரமைப்பு பணிகள் பகல் மற்றும் இரவு நேரங்களில் தொடர்ச்சியாக நடைபெற இருப்பதால், நடைமேடை 10, 11ல் இயக்கப்பட்ட மின்சார ரயில்கள் முழுவதுமாக எக்ஸ்பிரஸ் ரயில் நடைமேடையில் இருந்து இயக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 8 விரைவு ரயில்கள் மாம்பலம் ரயில் நிலையத்தில் ஏப்.5 வரை நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. திருச்சி, குமரி, புதுவை, செங்கோட்டை, நெல்லை, மதுரை, மன்னார்குடி, சேலம் செல்லும் விரைவு ரயில்கள் மாம்பலத்தில் நின்று செல்லும்.

## பள்ளி மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு திரைப்படம்

தஞ்சாவூர், பிப்.22-





திருக்காட்டுப்பள்ளி அருகே அலமேலு புரம்பூண்டி சின்ன ராணி உயர் நிலை பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு வேம்பு திரைப்படம் காட்டப் பட்டது.

திருக்காட் டுப்பள்ளி அருகே அலமேலுபுரம் பூண்டியில் சின்ன ராணி உயர்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் பயின்ற மாணவர் ஜஸ்டின் பிரபு வேம்பு என்ற படத்தை கதை, திரைக்கதை, வசனத் துடன் இயக்கியுள்ளார்.

அந்தப் படத்தை தான் படித்த பள்ளியில் உள்ள மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் திரையிட்டு காண்பித்தார்.

இப்படம் சென்னை பிலிம் பெஸ்டிவலில் சிறந்த நடிகைக்காக ஷீலா தேர்ந்தெடுக்கப்பட்டுவிருது பெற்றுள்ளார் அதுபோல அகமதாபாத் பிலிம் பெஸ்டிவலில் சிறந்த நடிகையாக ஷீலாவுக்கும், சிறந்த நடிகருக்கான ஹரி கிருஷ்ணனுக்கும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. அது போல வீதி விருது விழாவில் இயக்குனர் மற்றும் நடிகருமான பாக்கியராஜ் அவர்கள் வேம்பு படத்தின் இயக்குநர் திரு . ஜஸ்டின் பிரபு அவர்களுக்கு சிறந்த இயக்குனருக்கான விருதை வழங்கி பாராட்டியுள்ளார்.


மேலும் இப்படத்தை தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் திரையிட திட்டமிட்டு அதற்கான பணிகள் நடந்து வருவதாகவும் இயக்குனர் தெரிவித்தார்.

மேலும் பூண்டி மாதா பேராலய அதிபரும், பங்கு தந்தையுமான சாம்சன் திரைப்படத்தை பார்த்து இயக்குனர் மற்றும் நடிகர்களை வாழ்த்தினார்.

மேலும் மாணவிகள் தைரியத்துடனும், ஊக்கத்துடன் இருப்பதற்கு இப்படம் உறுதுணையாக இருக்கும் என்றும் தெரி வித்தார்.

## மாசி மகம்: கும்பகோணத்தின் 7 சிவன் கோயில்களில் கொடியேற்றம்

கும்பகோணம், பிப்.22-



கும்பகோணத்தில் உள்ள 7 சிவன் கோயில்களில் மாசி மகத்தை யொட்டி கொடியேற்றம் நடைபெற்றது.

கும்பகோணத்தில் நடைபெறும் மகாமக விழாவுக்கு சிறப்புப் பெற்ற 12 சிவன் கோயில்கள் மற்றும் 5 பெருமாள் கோயில்களில் 12 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுவது மாசி மகாமகம்.

நிகழாண்டு மாசி மக விழாவை யொட்டி மங்களாம் பிகையம்மன் உடனாய ஆதிகும்பேஸ்வரர், காசி விசாலாட்சி உடனாய காசி விஸ்வநாதர், சோமசுந்தரி உடனாய சோமேஸ்வரர், சவுந்தரநாயகி உடனாய கவுதமேஸ்வரர், அமிர்தவள்ளி உடனாய அபிமுகேஸ்வரர், ஞானாம்பிகை உடனாய காளஹஸ்தீஸ்வரர், கரும்படு சொல்லியம்மை உடனாய சாட்சிநாதர் சுவாமி ஆகிய 7 சிவன் கோயில்களில் இன்று (பிப்.21) கொடியேற்றம் நடைபெற்றது.

முன்னதாக கொடிமரத்துக்கு பல்வேறு வகையான மங்களப் பொருட்களால் அபிஷேகம் செய்விக்கப்பட்டு விமரிசையாக கொடியேற்றம் நடைபெற்றது. அப்போது 7 கோயிலில் உள்ள பஞ்சமூர்த்தி சுவாமிகள் கொடி மரத்தின் முன்பு பக்தர்களுக்கு காட்சியளித்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் மேற்கொண்டனர். வரும் மார்ச் 23ம் தேதி வரை பல்வேறு வாகனங்களில் சுவாமிகள் வீதியுலா நடைபெறுகிறது.

ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் பிப்.24ம் தேதி 63 நாயன்மார்கள் வெள்ளி பல்லக்கில் வீதியுலாவும், பிப்.25ம் தேதி இரவு ஒலைச்சப்பரமும், பிப்.28ம் தேதி விநாயகர், முருகன், சுவாமி, அம்பாள் ஆகிய 4 திருத்தேரோட்டமும், மார்ச் 1ம் தேதி சண்டிகேஸ்வரர் தேரோட்டம், மார்ச் 1ம் தேதி மாலை காசிவிஸ்வநாதர், கௌதமேஸ்வரர், அபிமுகேஸ்வரர் ஆகிய 3 கோயிலின் தேரோட்டம் மகாமக குளத்தை சுற்றிலும், காலஹஸ்தீஸ்வரர் மற்றும் சோமேஸ்வரர் கோயில்களின் தேரோடும் வீதிகளில் தேரோட்டம் நடைபெறுகிறது.

இதேபோல் கம்பட்ட விஸ்வநாதர் கோயிலில் திருப்பணிக்கான பாலாலயம் நடைபெற்றுள்ளதால், இந்தக் கோயிலை தவிர மற்ற நாகேஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர், கோடிஸ்வரர், அமிர்தகலசநாதர், பாணபுரீஸ்வரர், ஆகிய 5 சிவன் கோயில்களில் ஏக தின உற்சமான தீர்த்தவாரிக்கு மகா மக குளக்கரையில் எழுந்தருளுகின்றனர். இதைத் தொடர்ந்து மார்ச் 2ம் தேதி 11 சிவன் கோயில் சுவாமிகள் பஞ்ச மூர்த்திகளுடன் புறப்பட்டு, வீதியுலாவாக மகா மககுளக்கரையில் எழுந்தருளி மகல் 12 மணிக்கு மேல் 12.30 மணிக்குள் தீர்த்தவாரி நடைபெறுகிறது. மார்ச் 3ம் தேதி இரவு ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் சுவாமி அம்பாள் திருக்கோயில் உட்பிரகாரத்தில் 6 முறையும், வீதியில் ஒரு முறை என 7 முறை வலம் வருதலும், 4ம் தேதி இரவு சுவாமி அம்பாள் ஏகாசனத்தில் புறப்பாடு நடைபெறுகிறது. இதே போல் சக்கரபாணி, ராஜகோபாலசுவாமி, ஆதிவராகப்பெருமாள் ஆகிய 3 பெருமாள் கோயில்களில் நாளை (பிப்.22) கொடியேற்றம் நடைபெறுகிறது. வரும் மார்ச் மார்ச் 1ம் தேதி வரை பல்வேறு வாகனங்களில் சுவாமிகள் வீதியுலா நடைபெறுகிறது. பிரதான நிகழ்ச்சியான மாசி மகமான மார்ச் 2ம் தேதி காலை 9 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது.

சாரங்கபாணி சுவாமி கோயிலில் பிப்.25ம் தேதி முதல் மார்ச் 1ம் தேதி வரை ப்ரஹார புறப்பாடும், ஸ்ரீ சடாரி திருமஞ்சனமும், மார்ச 2ம் தேதி காலை பெருமாள் உபயநாச்சியாருடன் காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் வீதியுலா, தொடர்ந்து பொற்றாமரை குளத்தில் தெப்ப உற்சவமும், தீர்த்தவாரி, இரவு 11 மணிக்கு பெருமாள் உபயநாச்சியாருடன் ஆஸ்தா னத்திற்கு எழுந் தருளல் நடை பெறுகிறது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அந்தந்த கோயில் செயல் அலுவலர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் உயபதாரர்கள் செய்து வருகின்றனர்.

# மானாமதுரை ஆதரவு அறக்கட்டளை நிறுவனர் செல்வத்திற்கு ‘அறம் விருது’ நடிகர் பாக்கியராஜ் வழங்கி கௌரவிப்பு



சிவகங்கை, பிப்.22-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கண்ணார் தெருவில் செயல்பட்டு வரும் “ஆதரவு அறக்கட்டளை” என்னும் சமூக சேவை அமைப்பை செல்வம் என்பவர் நடத்தி வருகிறார். இந்த அறக்கட்டளையின் மூலம் பெண்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தையல் பயிற்சி, பியூட்டிஷன் பயிற்சி, கணினி பயிற்சி உள்ளிட்ட பல்வேறு தொழில் சார்ந்த பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோல், பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் மாலை நேரங்களில் இலவச டியூஷன் வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், ஆதரவற்ற மற்றும் முதியவர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கும் பணியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு பல ஆண்டுகளாக தன்னலமற்ற சமூக சேவையில் ஈடுபட்டு வரும் ஆதரவு அறக்கட்டளையின் நிறுவனர் செல்வம் அவர்களின் சேவையை பாராட்டும் வகையில், சென்னையைச் சேர்ந்த “அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை” சார்பில் வழங்கப்படும் “அறம் விருதுகள்” நிகழ்ச்சியில் சிறந்த சமூக சேவருக்கான விருது வழங்கப்பட்டது.

இந்த விருதினை திரைப்பட நடிகரும் இயக்குநருமான பாக்கியராஜ் செல்வத்திற்கு வழங்கி கௌரவித்தார்.

# கீழக்கோட்டையில் சர்வதேச தாய்மொழி தினக் கொண்டாட்டம்: ஒரு மொழி... ஒரு அடையாளம்... ஒரு உணர்வு...



காளையார் கோவில், பிப்.22-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது. அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை தாங்கினார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். ஆசிரியை கமலம்பாய் சர்வதேச தாய்மொழி தின உறுதிமொழி வாசிக்க மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமை உரையாற்றும்போது மக்கள் எத்தனை மொழியை தங்களது ஆர்வத்தின் காரணமாக கற்றுக்கொண்டாலும் தாய்மொழி பற்று இருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த வகையில் தாய்மொழியின் சிறப்பை போற்றும் வகையிலும் தாய்மொழியின் அவசியத்தை உணர்த்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21 ஆம் தேதி சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. பாகிஸ்தான் தனி நாடாக அறிவிக்கப்பட்ட திலிருந்தே வங்க மொழிக்கு உரிய மரியாதை அளிக்கப்படவில்லை. அதைக் கண்டித்தும் வங்க மொழியை ஏற்பளிக்க வலியுறுத்தியும் 1952 ஆம் ஆண்டு இதே பிப்ரவரி 21ஆம் நாளில் டாக்காவில் நடத்தப்பட்ட போராட்டத்தின்போது அப்துஸ் சலாம், அபுல் பர்கட், ரபீக் உத்தின் அகமது, அப்துல் ஜப்பார், ஷபியுர் ரஹ்மான் ஆகிய 5 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும் அனைத்து மொழிகளையும் பாதுகாக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தும் வகையிலும் அந்நாளை சர்வதேச தாய்மொழி தினமாக அனுசரிப்பது குறித்து கடந்த 1999 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ பொது மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதை தொடர்ந்து 2000 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அப்போது தொடங்கி உலக அளவில் 27 ஆம் ஆண்டாக இந்த நாள் கொண்டாப்படுகிறது. இந்த ஆண்டின் சர்வதேச தாய்மொழி தினத்திற்கான கருப்பொருள் “பன்மொழி கல்வி குறித்த இளைஞர்களின் குரல்கள்” என்பதாகும் என்று கூறினார். ஆசிரியை வாசுகி நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவியாளர் அஞ்சலை கஸ்தூரி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கிருஷ்ணகிரி கங்கலேரி பஞ்சாயத்து மலைச்சந்து கிராமத்தில் அமைந்துள்ள மஹா காமாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகம்



கிருஷ்ணகிரி, பிப்.22-

கிருஷ்ணகிரி கங்கலேரி பஞ்சாயத்து மலைச்சந்து கிராமத்தில் அமைந்துள்ள மஹா காமாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது. இதையொட்டி, கடந்த 6ல் திருவிளக்கு வழிபாடு, கோ பூஜை, பந்தகால் கொடியேற்றுதல், மஹா கலசாபிஷேகம் ஆகியவை நடந்தது. 18ல், திருமுறை பாராயணம், வேத பாராயணம், விக்னேஷ்வர பூஜை, மஹா கணபதி வேதிகார்சனை, மஹா கணபதி ஹோமம் மற்றும் முதல்கால மஹா பூர்ணாஹுதி ஆகியவை நடந்தது. 19ல், இரண்டாம் கால மஹா பூர்ணாஹுதியும், இரவு, மூன்றாம் கால மஹா பூர்ணாஹுதியும் நடந்தது.

நேற்று காலை, கோ பூஜை, விநாயகர் பூஜை, நான்காம் கால மஹா பூர்ணாஹுதி, யாத்ரா தான மஹா சங்கல்பம், 9.30 மணிக்கு, யாகசாலையில் இருந்து கலசங்கள் புறப்பாடும், 9.55 மணிக்கு, காமாட்சி அம்மன் நூதன விமானத்திற்கு புனித நீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகமும், தொடர்ந்து மூலவர் மஹா காமாட்சி அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகமும் நடந்தது. தொடர்ந்து, காமாட்சி அம்மனுக்கு மஹா அபிஷேகம், விசேஷ அலங்காரம், தச தரிசனம், மாங்கல்ய தாரணம், மஹா தீபாராதனை, பிரசாத வினியோகம் ஆகியவை நடந்தது. விழாவையொட்டி காலை 8 மணி முதல் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதே போல், கிருஷ்ணகிரி அடுத்த பி.ஜி.புதூர் கிராமத்தில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் நேற்று காலை நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதனாம் வழங்கப்பட்டன.






# நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பகுதியில் திமுக மாபெரும் பொது கூட்டம்

நீலகிரி, பிப்.22-

தி.மு.கழக தலைமை கழகத்தின் அறிவிப்பின்படி “தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரையின் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாபெரும் பொதுகூட்டம் கோத்தகிரி மார்க்கெட் திடலில் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜூ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோத்தகிரி செயலாளர் நெல்லை கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில், கழக மாநில அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா EX-MP.,கழக அரசின் திட்டங்களை பட்டியலிட்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர்கள் தமிழ்செல்வன், லட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் Expo செந்தில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, குன்னூர் ஒன்றிய கழகச் செயலாளர் பிரேம்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கதுல்லா, காளிதாசன், ராஜேந்திரன், செல்வம், பேரூர் கழக செயலாளர்கள் காளிதாஸ், , ரமேஷ், முத்து, மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராம்குமார், ஆல்வின், செந்தில்நாதன், சுரேஷ், தீனதயாளன் உட்பட அணிகளின் துணை அமைப்பாளர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் பெருந்திராளாக கலந்துகொண்டனர்.



# நீலகிரி மாவட்டம் மசினகுடி சீகூர் வனசரகத்தில் காட்டுத்தீதடுப்பு வார விழா

நீலகிரி, பிப்.22-

வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், முதுமலை புலிகள் காப்|பகம், அவர்களின் வழிகாட்டுதலின்படி மற்றும் துணை இயக்குநர் அவர்களின் அறிவுறு த்தலின்படி முதுமலை புலிகள் காப்பகம் மசினகுடி வன கோட்டத்திற்குட்பட்ட சிங்காரா வன சரகம், மசினகுடி வனசரகம் மற்றும் சிகூர் ஆகிய வனசரகங்களில் காட்டுத்தீ தடுப்பு வாரவிழாவை

முன்னிட்டு 1602.2026 ம் தேதி மசினகுடி மற்றும் மேற்கூறிய சரகத்திற்குட்பட்ட கிராமங்களில் வனத்துறை சார்பில் சுவற்றில் தீ தடுப்பு விழிப்புணர்வு போஸ்டர் ஒட்டி பொதுமக்களிடையே துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து 17/02/2026 நம்ம தேதியன்று சிங்காரா வனசரகம் வாழைத்தோட்டம் சூழல் மேம்பாட்டு மையம், மசினகுடி வனசரகம் மாயார், பூதநத்தம், செம்மநத்தம் ஆகிய கிராமங்களின் சூழல் மேம்பாட்டு மையம் மற்றும் சீகூர் வனசரகத்திற்குட்பட்ட ஆனைகட்டி, சிறியூர் ஆகிய கிராம வனக்குழுவினருடன் நடைபெற்ற கூட்டத்தில் காப்புக்காடுகளில் தீயினால் ஏற்படும் சேதம் மற்றும் அழிவுகள் குறித்தும் அதை தடுக்கும் முறைகள் பற்றியும் விழிப்புணர்வு கூட்டம் நடத்தியும் துண்டு பிரசுரம் வழங்கியும் வரப்பட்டது. மேலும் 18| 02/2026ம் தேதி அன்று மசினகுடி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடையே வனத் தீ பற்றிய விழிப்புணர்வு கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகியவை நடத்தப்பட்டது.

மேலும் 19/02/2026ம் தேதி அன்று மசினகுடி Loghouse-ல் கூடலூர் தீயணைப்புத்துறை மற்றும் மீட்புப் பணிகள் துறையினரால் மசினகுடி பொதுமக்களிடையே தீ தடுப்புமுறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து மசினகுடி பெட்ரோல் பங்க் முதல் மசனகுடி வன சோதனை சாவடி வரை மசினகுடி அரசு பள்ளி மாணவர்களின் தீ தடுப்பு விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தியும் கோஷங்கள் எழுப்பியவாறு கோட்ட வனச்சரக சீருடை பணியாளர்களுடன் பேரணி நடத்தப்பட்டது.



# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் உலகத் தாய்மொழி தினம் உறுதிமொழி ஏற்பு

காளையார் கோவில், பிப்.22-

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பிப்ரவரி 21 தாய்மொழி தினத்தை முன்னிட்டு உறுதி மொழியை அனைத்து மாணவர்களும் எடுத்துக் கொண்டனர். நாடு முழுவதும் பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி உலகத் தாய்மொழி தினமாக கொண்டாடப்படுகிறது. சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் (பொறுப்பு) சுரேஷ் தலைமையில், ஆசிரியர்களும், மாணவர்களும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். எட்டாம் வகுப்பு மாணவன் கெவின் ரியாசன் உறுதி மொழி கூற மற்ற மாணவர்கள் தொடர்ந்து கூறி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தலைமையாசிரியர் சுரேஷ் உலகத் தாய்மொழி தினம் பற்றி எடுத்துரைத்தார். உலகத்தில் உள்ள மொழிகளைக் காக்க வேண்டும் என்று யுனெஸ்கோ உலக தாய்மொழி தினத்தை அறிவித்துள்ளது.

ஒரு குழந்தை முதலில் அறிகின்ற ருசி தாய்ப்பால். அந்த குழந்தை முதலில் உணர்கின்ற மொழி தாய் மொழி. எனவே, தாய்ப்பாலை போல் தாய்மொழியும் நம் உயிர்ப்பானது. உணர்வோடு கலந்தது. தாய்மொழி என்பதும் ஒரு மொழிதானே என்று கடந்து போய்விட முடியாது. நம்முடைய 3 ஆயிரம் ஆண்டு மரபு, பண்பாடு, கலாச்சாரத்தை நினைவு அடுக் குகளில் கடத்தி வருகிறது. கருவில் இருக்கும் போதே தாய்மொழிச் சொற்களை குழந்தை கேட்கத் தொடங்கி விடுகிறது. நம்முடைய எண்ணம், படைப்பாற்றல் தாய்மொழி வழியாகவே நடக்கிறது. மனிதன் பேசும் மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டால் சிந்தனைத்திறன் பெருகும். ஆகையால் அடிப் படைக் கல்வி என்பது தாய்மொழியில் கற்பிக்கப்பட வேண்டியது கட்டாயம். அதுதான் ஒரு அறிவார்ந்த சமூகத்தை தொடரச் செய்யும்.’’மேலும் அனைவரும் தூய தமிழில் பெயர் வைக்க வேண்டும் என்றும்,தாய் மொழியான தமிழிலே கையொப்பம் இட வேண்டும் என்றும் இணையத்தில் தமிழ் மொழியின் பங்கு பற்றியும் தலைமையாசிரியர் உலகத் தாய்மொழி தினம் விழாவில் எடுத்துரைத்தார்.. ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம் , சத்துணவு பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# பாஜக சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம்

தஞ்சாவூர், பிப்.22-

தஞ்சாவூர் திருவை யாறு அருகே வரகூர், அம்மையகரம், கண்டமங்கலம் ஊராட்சிகளில் பாஜக சார்பில் நாடும் நமதே தமிழ்நாடு நமதே என்ற தலைப்பில் சக்தி கேந்திர தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் தங்க கென்னடி, தலைமை வகித்தார்.

சட்டசபை தொகுதி இணை அமைப்பாளர் பூண்டி வெங்கடேசன் முன்னிலை வகித்தார். முன்னாள் மாவட்ட தலைவர் ஜீவா சிவகுமார், வரகூர் புதுமைநாதன், அதிமுக முன்னாள் செய ணலாளர் சம்பத், அடஞ்சூர் கண்ணதாசன், பாஜக மாவட்ட பொதுச் செயலாளர் மல்லிகா, ஓ பி சி அணி மாவட்ட செயலாளர் மணிகண்டன், ஒன்றிய மகளிர் அணி தலைவர் சோபியா மேரி, தமிழ் மாநில காங்கிரஸ் வட்டார தலைவர் ரவிக்குமார், முன்னாள் சேர்மன் திருநாவுக்கரசு மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை திருவையாறு தெற்கு ஒன்றிய தலைவர் ஹரி பிரசாத் மற்றும் சக்தி கேந்திர பொறுப்பாளர்கள் ரவிச்சந்திரன் வரகூர் இளையராஜா பிரகதீஸ்வரன் செய்திருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161